முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 847

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.01.2022, ஞாயிற்றுக்கிழமை

1. கலிவெல்லப்பிறந்த மகா சக்தியே
கருணை வடிவான ஞான சக்தியே
அழியாமை தான்பெற்றதோடு
அகிலத்தார்க்கும் அந்த அற்புதத்தை தந்தருள
2. அருளவே என் அவதாரமாய்
அவதரித்த ஆறுமுக அரங்கனே
அருளுவேன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆறுமுகப்பெருமான் யானும் இனிதே
3. இனிதே பிலவ கலைத்திங்கள் தனில்
(பிலவ வருடம் தை மாதம் 10ம் நாள், 23.01.2022 ஞாயிற்றுக்கிழமை)
இயம்பிடுவேன் அரங்கனுக்கு இன்னும் சக்தி கூட
துணிவுகொண்டு நீ செய்யும் தர்மமே
தொண்டர்கள் மூலம் உலகத்தில் மாற்றம் நிகழ்த்தும்
4. மாற்றம் நிகழ்த்தும் உன் சன்மார்க்கமே
மக்களை மனிதனாக்கி நல்ல மகான்களும் ஆக்கி
அற்புதம் நிகழ்த்தும் ஏற்றம் தருகின்ற நல்ல ஞான ஆட்சிக்கு
உகந்த தொண்டர் படைகளை உருவாக்கி வரும் அரங்கனே
5. அரங்கனே உன் தொண்டும் தொண்டர்களுமே
அகிலத்தில் ஞான ஆட்சித்தரக்கூடும்
வரங்களாக நீ நித்தம் அருளுகின்ற
வல்லமை மிக்க என் சக்தியான உன்கரம்பட தரும் தீட்சை எல்லாம்
6. தீட்சைஎல்லாம் உலகோர்க்கு சக்தி கூட்டி
தெய்வபலம் ஞான பலம் தந்தருளுவதோடு
மாட்சிமைபட இந்த உலகை மீட்கவும்
மக்களெல்லாம் பாதுகாப்பாக வாழவும் அருள்புரியும்
7. அருள்மிக்க அறம்மிக்க அரங்கனே
ஆற்றல்பட உன் வெளிப்பாடு சடுதி நிகழ இருக்க
பொருள்பட உன் தொண்டர்கள் எண்ணிக்கை பெருகபெருக
பூவுலகம் பாதுகாப்பு மிக்க ஞான ஆட்சி தனை சடுதி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—